1979 பிப்ரவரி 26]

வேண்டி தாசில்தார் தனது அறிக்கையை வருவாய்க் கோட்ட அதிகாரிக்கு அனுப்புவார், உதவித் தொகையை வழங்குவதற்கு வருவாய்க் கோட்ட அதிகாரியே பொருத்தமான அதிகாரி யாவார். மாவட்ட ஆட்சித் தலைவர்கள் தத்தம் மாவட்டங்களில் இத்திட்டத்திற்கு மேற்பொறுப்பு வகிக்கிறார்கள். விண்ணப்ப நாளைப் பொறுத்து மூப்பு கால உதவித் தொகை தற்போது வழங்கப்படுகிறது. இதனால் அதிக வயதில் ஆதரவற்றவர்களாகி உதவித் தொகை கேட்டு விண்ணப்பிக்கும் சிலர் உரிய நேரத்தில் உதவித்தொகை பெற முடியவில்லை. எனவே, மூப்பு கால உதவித் தொகையை அனுமதிக்கும்போது 70 வயதும் அதற்கு மேம்பட்டும் உள்ளவர்களின் விண்ணப்பங்கள் அனைத்தும் (விண்ணப்ப நாள் எவ்வாறாயிருப்பினும்) முதலில் முடிவு செய்யப்பட வேண்டும் என்றும், 65 முதல் 69 வயதுள்ளவர்களின் விண்ணப்பங்கள் அவை வரப்பெற்ற நாட்களையொட்டி முடிவு செய்யப்பட வேண்டும் என்றும் அரசு கட்டளை இட்டுள்ளது.

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : வினா எண் 179. திரு. என். வரதராசன் ....

<u>திரு. மு. அம்பிகாபதி</u> : தலைவரவர்களே..........

<u>மாண்புமிகு பேரவைத் தலைவர்</u> : தயவுசெய்து நான் சொல்வதைக் கேளுங்கள். என்னென்ன தகவல்கள் ஓரளவுக்கு கிடைக்க வேண்டுமோ அது கிடைத்தாகிவிட்டது. நேரத்தைப் பற்றி நான் முதலிலேயே சொல்லி விட்டேன். ஆகவே, அமருங்கள் வினா எண். 179. திரு. என். வரதராசன்—மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர்.

<u>மின்வாரியத்தில் பயிற்சிப் பணியாளர்கள்</u>

*வினா எண். 179—<u>திரு. என். வரதராஜன்</u> : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா—

(அ) மின்வாரியத்தில் தமிழகம் முழுவதும் எடுத்துக் கொள்ளப்பட்ட அப்ரண்டிஸ்கள் எத்தனை பேர்?

(ஆ) அவர்களில் பயிற்சிக் காலம் முடிந்த பின் வீட்டுக்கு அனுப்பப்பட்டவர்கள் எத்தனை பேர்?

(இ) அவர்களுக்கு வேலைவாய்ப்புக்கு உத்தரவாதம் அளிக்க அரசிடம் ஏதேனும் திட்டம் உள்ளதா?

(ஈ) ஆம் எனில், அதன் விபரம் யாது?

மாண்புமிகு திரு, ச, இராமச்சந்திரன் :

(அ) 1,682 பேர்,

(ஆ) 109 பேர்,

(இ) இல்லை,

(ஈ) கேள்விக்கு இடமில்லை,

திரு, என், வரதராஜன் : தலைவரவர்களே. இவ்வாறு அப்ரண்டிஸாக சேர்த்து ஆயிரம் பேருக்கு மேல் இன்றைக்கு வேலையில்லாமல் இருக்கிறார்கள் என்று அறியப்படுகிறதே அவர்கள் அனைவருக்கும் விரைவில் வேலை கிடைக்கும் முயற்சியை மின் துறை எடுக்குமா என அறியவிரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, ச, இராமச்சந்திரன் : வேலைக்கான பயிற்சிதான் மின் வாரியத்தில் அளிக்கப்படுகிறது, வேலை காலி ஏற்பட்டால்தான் இவைகளையெல்லாம் மின் வாரியம் கவனிக்க முடியும், இவர்களுக்கு வேலை தேடுகின்ற நிறுவனமாக மின் வாரியம் இல்லை,

திரு, வி.கே. கோதண்டராமன் : சார். 3 ஆண்டுகள் முடிந்த உடனே கட்டயமாக வெளியே அனுப்பி விடவேண்டுமென்று அரசு ஆணையிட்டுள்ளதா? அப்படியானால். இது வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்கும் வழியா என்பதை உணர்ந்து மீண்டும் அவர்களே தொடர்ந்து வேலை செய்வதற்கு அதே துறையிலேயோ அல்லது வேறு எந்தத் துறையிலேயோ வேலை செய்வதற்கு அனுமதிக்கப்படுமா என அறியவிரும்புகிறேன்,

மாண்புமிகு திரு, ச, இராமச்சந்திரன் : தலைவரவர்களே. இதன் நோக்கம் வேலையில்லா திண்டாட்டத்தைப் போக்குவது அல்ல, வேலையைத் தெரிந்துகொள்வதற்குப் பயிற்சி அளிப்பது, ஓராண்டிலேயிருந்து 3 ஆண்டுகள் வரை அத்தகைய பயிற்சி அளிக்கப்படுகிறது, பயிற்சி முடிந்த உடன் வெளியே அனுப்பப்படுகிறார்கள்,

வயிரம்பேட்டையில் தெரு விளக்குகள்,

*வினா எண், 180—திரு, டி, ஆர், இராசாராம் ரெட்டி : மாண்புமிகு மின்சாரத் துறை அமைச்சர் கீழ்க்கண்ட வினாக்களுக்கு விடையளிப்பாரா ?

(அ) திண்டிவனம் தொகுதி இடையாளம் ஊராட்சி வயிரம் பேட்டையில் தெரு விளக்குகள் போட மின் துறையினரால் 1972-ல் கம்பங்கள் நட்டும் ஒயர் இழுக்கப்படவில்லை என்பது உண்மையா?

(ஆ) ஆம் எனில். அதற்கான காரணம் என்ன?